**<u>சுருக்கம்</u>**

கைத்தறித் தொழில் – விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், பொங்கல், 2010 – கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டபின் ஏற்பட்ட விலை வித்தியாசத் தொகை – ரூ.7.85 கோடி ஒப்பளிப்பு – பெடல்தறி சேலைகளை கொள்முதல் செய்ததற்கு பின்னேற்பு –ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை

அரசாணை (நிலை) எண்.14 நாள் 23.01.2013
நந்தன தை 10,
திருவள்ளுவராண்டு 2044)

**<u>படிக்கவும் :–</u>**

1) அரசாணை (நிலை) எண்.44, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 18.05.2009.
2) அரசு கடிதம் எண்.1, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 05.01.2010.
3) அரசாணை (நிலை) எண்.117, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை, நாள் 17.08.2010.
4) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் எண்.34794/2010/ப்பி1, நாள், 15.01.2011 மற்றும் 27.06.2011.

–––––––

**<u>ஆணை:–</u>**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை 2010–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்குத் தொடர்ந்து செயல்படுத்தவும், இத்திட்டத்தின் கீழ் 159 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 159 இலட்சம் பாலிகாட் வேட்டிகள் தேவையென நிர்ணயித்தும் ஆணையிடப்பட்டது. இதில் 30 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 10 இலட்சம் பாலிகாட் வேட்டிகளை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும், எஞ்சியுள்ள 129 இலட்சம் பாலிகாட் சேலைகள் மற்றும் 149 இலட்சம் பாலிகாட் வேட்டிகளை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் உற்பத்தி செய்யவும், இத்திட்டத்திற்கான செலவினமாக ரூ.256 கோடி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது.

2) மேலே இரண்டவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் 2010–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் விசைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படும் சேலைகளுக்கு தேவையின் அடிப்படையில் ஊடை இழை ஒன்றிற்கு ஒரு

மீட்டருக்கு ஒரு பைசா (1 பைசா) உயர்த்தி, விசைத்தறி சேலை ஒன்றிற்கு ரூ.24.48 நெசவுக் கூலியாக வழங்குவதற்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட சேலை, வேட்டிகளுக்கு கீழ்க்கண்டவாறு கொள்முதல் விலை நிர்ணயித்து ஆணையிடப்பட்டது:–

**<u>கைத்தறி</u>**

| | |
|---|---|
| பாலிகாட் சேலை | ரூ.126.45 |
| பாலிகாட் வேட்டி | ரூ.104.43 |

**<u>விசைத்தறி</u>**

| | |
|---|---|
| பாலிகாட் சேலை | ரூ.94.16 |
| பாலிகாட் வேட்டி | ரூ.65.43 |

4) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், பொங்கல் 2010 விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்ட 159.00 இலட்சம் வேட்டி மற்றும் 159.00 இலட்சம் சேலைகளின் மதிப்பான ரூ.263.85 கோடியில் ஏற்கனவே அரசிடமிருந்து பெறப்பட்டத் தொகை ரூ.256.00 கோடி போக எஞ்சியத் தொகை ரூ.7.85 கோடியினை ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மேற்சொன்ன திட்டத்திற்காக பெடல்தறி சேலை கொள்முதல் செய்த கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் நடவடிக்கைக்கு பின்னேற்பு ஆணை வழங்கவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

5) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, பொங்கல் 2010 விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்ட 159.00 இலட்சம் வேட்டி மற்றும் 159.00 இலட்சம் சேலைகளின் மதிப்பான ரூ.263.85 கோடியில், ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.256.00 கோடி போக எஞ்சியத் தொகையான ரூ.7.85 கோடி (ரூபாய் ஏழு கோடியே எண்பத்தி ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், இத்திட்டத்திற்காக பெடல்தறி சேலைகளை கொள்முதல் செய்த கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் நடவடிக்கைக்கு பின்னேற்பு ஆணை வழங்கியும் ஆணையிடுகிறது.

6) மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.7.85 கோடி, பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| **கணக்குத் தலைப்பு** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் –200 ஏனைய திட்டப்பணிகள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II மாநிலத் திட்டம் – JK வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 11 மானியங்கள் – 02 பொதுவான மானியம் | 578.00 |

(தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 200 JK 1123)

| கணக்குத் தலைப்பு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 789 ஆதி திராவிடருக்கான சிறப்புக்கூறுகள் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்–II மாநிலத் திட்டம் – JS சிறப்புக்கூறுகள் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல்–11 மானியங்கள்–02 பொதுவான மானியம் (தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 789 JS 1121) | 196.00 |
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JB வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 11 மானியங்கள் –02 பொதுவான மானியம் (தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 796 JB 1120) | 11.00 |
| **மொத்தம்** | **785.00** |

7) மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கீழ்க்கண்ட தன் வைப்புக் கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்:-

> "K. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும் – (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் – 8443 00 பொது வைப்புத் தொகைகள் – 800 மற்ற வைப்புகள் – BN தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் வைப்புத் தொகைகள் (கோ–ஆப்டெக்ஸ்)"
>
> (தகவல் தொகுப்பு குறியீடு 8443 00 800 BN 000E (வரவுகள் )

8) மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான கூடுதல் நிதி ஒதுக்கீடு 2012–2013–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் செய்யப்படும். இச்செலவினம் குறித்து 2012–2013–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்வதினை எதிர்நோக்கி, பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9) இச்செலவினத்தை 2012–2013ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் 2012–2013ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான உரிய செயற்குறிப்பினை நிதி (தொழில்கள்) துறைக்கு தவறாமல் அனுப்புமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10) இவ்வாணை, நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 362/ நிதி (தொழில்கள்)/2012,நாள்21.01.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.2160 (இரண்டாயிரத்து நூற்று அறுபது)–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்,
குறளகம் இரண்டாம் தளம், சென்னை – 600 108.
தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநர்,
கோஆப்டெக்ஸ், எழும்பூர், சென்னை – 600 008.
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை– 600 005
மாநில தலைமைக் கணக்காயர் (A&E),சென்னை– 600 018/(பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை– 600 018 /(பெயரில்)
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை– 600 001 .

<u>நகல் :–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலர், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
வருவாய்த் துறை / நிதித் (தொழில்கள் / வரவு செலவு / (பொது –I
மற்றும் II) துறை, சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை,
சென்னை– 600 009.
அரசு செயலாளர் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை– 600 009.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்